**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 175/2024**

Deposition of Witness of PW6

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | அரிச்சந்திரன் | Calling | : |
| Father/Husband's Name | : | | Age | : |
| Village | : | | | : |
| Taluk | : | | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 12th பிப்ரவரி 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தாளவாடி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.10.2023 ம் தேதி நான் அரச்சலூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்துபோது சுந்தரம்மாள் என்பவர் நிலையம்ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை கொடுத்து நிலைய குற்ற எண்.222/2023 இதச பிரிவு 279, 304(A) இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகாரின் அசலையும் இணைத்து ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மேல் விசாரணைக்காக வைத்தேன். இது சம்பந்தமாக என்னை காவல்நிலைய ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்காக குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 18:52:15 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 175/2024**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : துரைசாமி | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 12th பிப்ரவரி 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் 31.04.2024ம் தேதி சத்தியமங்கலம் நெடுஞ்சாலை ரோந்து பிரிவு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது பெருந்துறையில் வசித்து வருகிறேன். கடந்த 14.10.2023 அன்று அரச்சலூர் காவல்நிலையத்தி உதவி ஆய்வளராக பணியில் இருந்த போது காலை 6.00 மணிக்கு இந்த வழக்கில் விபத்தில் அடிபட்டு இறந்துபோன ராமசாமியின் மனைவி கொடுத்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண்.222/2023 சட்டபிரிவுகள் 279, 304(A) இதசன் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில், லோகநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு காலை 8.00 மணிக்கு ஈரோடு அரசு மருத்துவமனை சென்று காலை 8.00 மணியிலிருந்து 10.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் இறந்துபோன ராமசாமி பிரேதத்தை சாட்சி சுந்தரம்மாள் அடையாளம் காட்ட பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 18:52:20 +0530

வழக்கை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமான ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்காக குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 18:52:25 +0530